**நிகழும் திருவள்ளுவராண்டு விளம்பி வருடம் 2018-ம் ஆண்டு ஜுலை மாதம் 31-ம் தேதி ஆடி மாதம் 15-ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

## பொருள் 1

வால்பாறை நகராட்சி 2018-2019-ம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 03-07-2018-ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரபெற்றுள்ளது.

| வ எ | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பொது பிரிவு, வருவாய் பிரிவு, கணனி மையம் மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள கணனிக்கு புதிய **Laserjet 1020 Plus 5 No** ஆகிய இனங்கள் வாங்கி கொடுத்தல் | 100000 | 1. Sai Nitish Computers Vazahithootam Valparai<br><br>2 Sri Venkateswara Systems | 0.06% ம.வி. குறைவு<br><br>0.25% ம.வி. அதிகம் |

அலுவலக குறிப்பு

1 இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையைவிட 0.06% ம.வி.குறைவாக கொடுத்துள்ள Sai Nitish Compouters Vazahithootam Valparai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பொருள் வைக்க அனுமதிக்கு

*நகரமன்ற தீர்மான எண். 048, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.*

## பொருள் 2

வால்பாறை நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு 2015-2016-ம் ஆண்டு மற்றும் 2017-2018-ம் ஆண்டிற்கான வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பற்றி விபரம் மாலை தமிழகம் நாளிதழில் 17.07.2018-ல் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.25,200/- Maalai Tamizhagam Chennai என்ற பெயருக்கு தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கு

**அலுவலக குறிப்பு**

1 *மன்றம் அனுமதி வழங்கலாம்*

2 ந.க.எண்.1138/2017/இ-1

*நகரமன்ற தீர்மான எண். 049, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.*

## பொருள் 3

வால்பாறை நகராட்சியில் பணியாளர்கள் அலுவலர்கள் சேமநலநிதி தொகைக்கு கடந்த 2015-16 ஆம் ஆண்டு முதல் 2017-18-ஆம் ஆண்டு தேதிவரை வட்டி பெறப்படாமல் உள்ளது. மேற்கண்ட வைப்பு தொகைக்கு தனியார் நிறுவனம் மூலம் வட்டி கணக்கீட்டு செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் மூலம் வட்டி பெற்று ஒவ்வொரு பணியாளர்களின் கணக்கில் வரவு வைக்கவும் மேற்கண்டவாறு வட்டி கணக்கீடு செய்ய ஆகும் செலவுகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண். 24/2017/அ-1, நாள். 09.07.2018
*நகரமன்ற தீர்மான எண். 050, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.*

**பொருள் : 4**

வால்பாறை நகராட்சி சொந்தமான ஊசிமலை சாலையின் ஓரம் மழையினால் மண் சரிவு ஏற்பட்டுள்ளதை சரிசெய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்
2 கோப்பு எண்.441/2018/இ-1

*நகரமன்ற தீர்மான எண். 051, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.*

பொருள் : 5

வால்பாறை நகராட்சி சொந்தமான அக்காமலை சாலையின் ஓரம் மழையினால் மண் சரிவு ஏற்பட்டுள்ளதை சரிசெய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்
2 கோப்பு எண்.441/2018/இ-1

*நகரமன்ற தீர்மான எண். 052, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.*

**பொருள் : 6**

வால்பாறை நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின் ஒயர்கள் மிகவும் பழுதுபட்டுள்ளதால் மழைகாலங்களில் மின் கசிவு ஏற்படுவதால் அதனை சரிசெய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்
2 கோப்பு எண்.441/2018/இ-1

*நகரமன்ற தீர்மான எண். 053, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.*

**பொருள் : 7**

வால்பாறை நகராட்சி சொந்தமான விருந்தினர் மாளிகை, ஒருங்கிணைந்த சுற்றுலா வளாகம் மற்றும் யாத்திரி நிவாஸ் ஆகிய மின் ஒயர்கள் மிகவும் பழுதுபட்டுள்ளதால் மழைகாலங்களில் மின் கசிவு ஏற்படுவதால் அதனை சரிசெய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்
2 கோப்பு எண்.441/2018/இ-1

*நகரமன்ற தீர்மான எண். 054, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.*

**பொருள் : 8**

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட வட்டாட்சியர் அலுவலக வளாகம், இந்துக்கள் மயானம், ராஜீவ் காந்தி நகர், தீயனைப்பு நிலையம், காமராஜ் நகர், துளசிங்க நகர் மற்றும் அரசு மேல் நிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் அடர்ந்த முற்புதற்கள் அதிக அளவில் உள்ள அப்பகுதியில் சிறுத்தை புலிகள் தங்குவதால் இரவு நேரங்களில் பொது மக்களுக்கு அவ்வழியாக செல்லுவதால் உயிர் சேதம் ஏற்படவாய்பு உள்ளதால் அடர்ந்த முற்புதர்களை அகற்ற தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்

2 கோப்பு எண்.441/2018/இ-1

***நகரமன்ற தீர்மான எண். 055, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.***

பொருள் : 9

வால்பாறை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தெருவிளக்குகள் மிகவும் குறைவாக உள்ளதால் கூடுதலாக 72 வாட்ஸ் பல்பு 80 எண்ணிக்கையலான வாங்கி கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்

2 கோப்பு எண்.480/2018/இ-1

***நகரமன்ற தீர்மான எண். 056, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.***

பொருள் : 10

வால்பாறை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தெருவிளக்குகள் மிகவும் குறைவாக உள்ளதால் கூடுதலாக 72 வாட்ஸ் பல்பு 40 எண்ணிக்கையலான வாங்கி கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1 மன்றம் அனுமதிக்கலாம்

2 கோப்பு எண்.480/2018/இ-1

***நகரமன்ற தீர்மான எண். 057, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது.***